# நீங்கள் கொடுமைப்படுத்தி அடக்கப் பட்டீர்களா?



**ஒருவர் இன்னொருவரை ஒரு தரத்திற்கு மேல் வேண்டுமென்று நிலைகுலைய வைக்கும் போது அல்லது கேடு விளைவிக்கும் போது கொடுமைப்படுத்தி அடக்குதல் நடைபெறுகிறது.**

நீங்கள் பாடசாலையில் பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்று உணர்வதற்கு உங்களுக்கு எப்போதும் உரிமை உண்டு.

கொடுமைப்படுத்தி அடக்குதலை உதவியின்றி நிறுத்துவது கடுமையாக இருக்கலாம். கீழே தரப்பட்டிருக்கும் யோசனைகளை பிரயோகிக்க இயலாவிட்டால் ஒரு தாய் அல்லது தகப்பன் அல்லது ஒரு ஆசிரியரின் உதவியை நாடுங்கள்.



## நீங்கள் செய்யக்கூடிய காரியங்கள்

- கொடுமைப்படுத்தி அடக்கும் வகையில் செயலாற்றும் நபரை நிறுத்தும்படி கூறுங்கள்
- அவர்கள் தொடங்கியவுடன் விரைவாக இடத்தைவிட்டு நகருங்கள்
- ஒரு நெருங்கிய நண்பர் அல்லது குடும்ப அங்கத்தவருடன் கதைத்து என்ன செய்யவேண்டும் என்று ஆதரவையும் யோசனைகளையும் கேளுங்கள்
- நீங்கள் அதை ரசிக்கவில்லை என்ற வகையில் செயலாற்றுங்கள்
- முடியுமானால் ஒரு கேலியான அபிப்பிராயத்தைக் கூறுங்கள்

மொழிபெயர்ப்பு சேவைகள் இலவசமாக கிடைக்கும். உதவிக்கு TIS (தொலைபேசி மொழிபெயர்ப்பு சேவை) யை 131 450 இல் அழைத்து **சிறுவர் உதவி லைன்** ஐ 1800 551 800 இல் அழைக்கும்படி கேளுங்கள்.

நீங்கள் வலைத் தளம் **www.kidshelp.com.au** யும் தரிசிக்கலாம்

Tamil
Knowledge&Skills
Building a Future
Victoria
The Place To Be